மாண்புமிகு திரு செ. மாதவன் : ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட தொகை குறைகிற காரணத்தினுல் 7,500 பேர்கள் வேலையிழக்க நேரிடும் என்கிற பய உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. இதையும் நமது முதலமைச்சர் அவர்கள் தம் தந்தியில் கூறியிருக்கிருர்கள்.

ரேயான் தொழிற்சாலை.

*422 வினு திரு. கி. செயராமன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரேயான் நூல்களுக்கு வேண்டிய ரேயான் கூழ், மரக்கூழ் தயாரிக்கும் ஆலை ஒன்றை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ.மாதவன் : (அ) & (இ) : தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், ரேயான் தயாரிப்பதற்கு உதவும் மரக்கூழ், விஸ்கோஸ் நெட்டிழை (Viscose Staple Fibre) முதலியவற்றை தயாரிப்பதற்குத் தமிழ்நாட்டில் ரூ. 30 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொழிற்சாலை ஒன்று அமைக்க அனுமதிக் கடிதம் வழங்குமாறு கேட்டு 1973, டிசம்டர் திங்களில் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இந்திய அரசிடமிருந்து அனுமதிக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

Import licences.

* 423 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the recommendations of the State Government are obtained by the Union Ministry of International Trade before import licences are issued to parties in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : இறக்குமதி வணிகக் கட்டுப்பாடு விதிமுறையின்படி, இந்திய அரசால் இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படுவதற்கு, தலைமைச் செயலக அளவில் மாநில அரசின் பரிவுரை தேவையில்லை. பொறுப்பேற்கும் அதிகாரியின் பரிவுரை தேவைப்படுகிறது. மாநில அரசின் அத்தகைய அதிகாரிகளையும் அவர்களின் பரிவுரைகள் தேவைப்படுகிற தொழிற்பிரிவுகளையும் காட்டும் விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 465-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.